இயேசுவின் இரண்டாம் வருகைக்கு பிறகு நடக்கப் போகும் சம்பவங்கள்!

(கைவிடப்பட்ட தேவ பிள்ளைகளுக்கு
இப்புத்தகம் மிகவும் உதவியாக இருக்கும்)

ஆசிரியர்

சகோதரி **V. மரியா (எ) மிரியாம்**

பதிப்பாசிரியர்

சுவி. டாக்டர் எஸ்.தாயப்பன்

நன்கொடை ரூ.10/-

முதல் பதிப்பு: செப்டம்பர் 2017 – 3,000

புத்தகங்கள் கிடைக்குமிடம்:

★ **சகோதரி V. மரியா (எ) மிரியாம்**
No.7-A, முதல் மாடி, கான்வெண்ட் வீதி,
நெல்லித்தோப்பு அஞ்சல்
புதுச்சேரி – 5
செல்: 9688748968 / 8012162400

★ **சுவிசேஷகர் S. தாயப்பன்**

புத்தகப் பதிப்பாளர் – வெளியிடுபவர்:
சுவிசேஷகர் Dr. S.தாயப்பன்
எண்.12, ஜி.டி.நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ–1
சிட்லபாக்கம் மெயின் ரோடு,
சேலையூர் (அஞ்சல்)
சென்னை – 600 073
தொலைபேசி (044) 22234526 / 43552899
கைபேசி: 8680859894

குறிப்பு: இப்புத்தகம் முழுவதும் ஆவியானவர் ஏவுதலின்படி எழுதப் பட்டது. இதில் எழுதப்பட்டுள்ள வேதவசனங்கள் அனைத்தையும் பலமுறை படித்து உறுதி செய்து கொள்ளுங்கள். ஆண்டவரின் வருகை நாட்களிலும், உலக முடிவு நாட்களிலும் அதிக இருளும், காற்றுகளும் தீவிரமாக வீசும். தெரிந்து கொள்ளப்பட் பிள்ளைகள் மேலே பரலோகம் பறந்து போக காற்றுகள் வீசும். எனவே தேவ பிள்ளைகள் பயப்படாமல் அவரவர் வீட்டில் இருக்கவும். (ஏசாயா 60:2, அப்போ 2:20, மத்தேயு 24:29, 17, 18, ஏசாயா 26:20, நாகூம் 1:3, எரேமி 30:23)

இந்த நூல் மற்றும் விசிடி கிடைக்கும் முகவரி

எஸ்.தாயப்பன்
12, ஜி.டி.நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ -1,
சேலையூர் போஸ்ட், சென்னை - 600 073.
தொலைபேசி: 044-22234526. மின்னஞ்சல்: **sakthiprabha@yahoo.com**

நூலை அனுப்ப சில விதிகள்:

ஒவ்வொரு நூலுக்கும், விசிடிக்கும் நன்கொடை ரூ.10/- + தபால் செலவு ரூ.1. **M.O., D.D.** அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை **M.O** பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் வெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். உங்கள் தொலைபேசி, செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும். செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **MO, DD** பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும். விசிடி அனுப்ப தபால் செலவு மட்டும்: கொரியரில் பதிவு பார்சலில் அனுப்ப (தமிழ்நாட்டிற்குள்) 1 முதல் 15 விசிடி வரை அனுப்ப ரூ.50/-. 16 முதல் 25 விசிடி அனுப்ப ரூ.60/-

100 விசிடிக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் கே.பி.என். பார்சல் சர்வீஸ் மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

வங்கியில் பணம் கட்டி புத்தகம் பெற...

கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் பணம் செலுத்தி விட்டு எங்களுக்கு தகவல் அளித்தால், நீங்கள் வேண்டும் புத்தகங்கள் / **CD** அனுப்பி வைக்கப்படும். வங்கிக் கணக்கு விபரம்:

எஸ்.தாயப்பன் (S. THAYAPPAN)
சிட்டி யூனியன் பேங்க், சிட்லபாக்கம், சென்னை - 600 064
A/c எண்: 295001001980044. IFS Code: CIUB 0000295

பிறகு கண்டிப்பாக தகவல் அளிக்க வேண்டிய தொலைபேசி எண்:

T. கார்த்திகேயன், 8680859894, 044 - 2223 4526, 044 - 4355 2899

நேரில் வர...

நேரில் நூல்களை பெற்றுக் கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து **M** சீரிஸ் மற்றும் வெள்ளை போர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். ஷேர் ஆட்டோ என்றால் ரூ.10 மட்டுமே. இடதுபுறம் உள்ள சிட்லபாக்கம் மெயின் ரோட்டில் 1/2 கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலதுபுறம் **K.K.** மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலது புற ஜி.டி. நாயுடு தெருவில்,இடது புறத்தில் இரண்டாவது வீடு.

பொருளடக்கம்

1. ஆசிரியரின் சாட்சியும் தேவன் தந்த வெளிப்பாடும் 6
2. புத்தகம் எழுதுவதற்கான நோக்கம் 12
3. வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகள் எங்கே இருப்பார்கள்? – வெளி 15:1–3. 15
4. ஆண்டவரின் வருகைக்குப் பிறகு பரிசுத்த ஆவியானவர் இருப்பாரா? – எசேக்கியேல் 11:13–16, எபேசி 4:30 17
5. பரிசுத்த ஆவியானவர் பரலோகம் திரும்பி செல்வதையும், கிருபையின் காலம் முடிவு பெற்றது என்பதையும் எப்படி அறிந்து கொள்வது? – வெளி 9:6–4. 20
6. ஆண்டவர் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகள் நிச்சயம் பரலோகம்தான் போய் இருப்பார்களா என்பதை எப்படி உறுதி செய்வது? – வெளி 3:4–5. 23
7. இயேசுவின் இரண்டாம் வருகைக்குப் பிறகு எத்தனை ஆண்டுகள் இவ்வுலகம் இருக்கும்? – தானியேல் 12:11–12. 25
8. உலகம் முற்றிலும் அழியாமல் எல்லா கண்டங்களிலும் ஒரு சில தேவ பிள்ளைகள் மட்டும் காப்பாற்றப்படுதல் – ஆமோஸ் 9:8 27
9. பூமி முழுவதும் ஒரே கர்த்தர் உருவாவதும், எல்லா பிள்ளைகளும் கர்த்தருடைய பிள்ளைகளாக மாறுவதும் எப்போது? – ஏசாயா 27:6. 29
10. கர்த்தரை அறிகிற அறிவைப் பெறுதலும், ஆசிரியர் ஆலோசனையும். 32

முன்னுரை

அன்புள்ள தேவ பிள்ளைகளே!

உங்கள் அன்பு சகோதரி மரியாவாகிய நான் தேவ கிருபையால் நாலு புத்தகங்கள் எழுதினேன். சில புத்தகங்கள் உங்கள் கரங்களுக்கு கிடைக்க சுவிசேஷகர் டாக்டர் எஸ்.தாயப்பன் ஐயா அவர்களை தேவன் விசேஷமாய் எடுத்து பயன்படுத்தினார். ஆதிநாட்களில் மோசேயும் ஆரோனும் சேர்ந்து தேவனுடைய எழுப்புதல் வேலைகளை இஸ்ரவேல் மத்தியில் செய்தார்கள். அதுபோல இந்த உலகின் கடைசி நாட்களில் அநேக தேவப் பிள்ளைகளை பரலோகம் சேர்க்க வேண்டும் என்ற தாகத்தோடு தாயப்பன் ஐயா அவர்கள் தனது சாட்சியின் மூலமும், தனது புத்தக ஊழியத்தின் வழியாகவும், உலகத்தின் பல ஊர்களுக்கும் நாடுகளுக்கும் சென்று பரலோக விதையை விதைத்துக் கொண்டு வருகிறார்.

சகோதரியாகிய என்னையும் எச்சரிக்கை ஊழியம் செய்வதை அறிந்த ஐயா அவர்கள், ஊழியத்தில் ஒருவரை ஒருவர் தாங்கும் படி எனக்கு உதவி செய்தார்கள். '**இரண்டு மூன்றுபேர் என் நாமத்தினால் எங்கு கூடி இருக்கிறார்களோ அங்கே நான் இருப்பேன்**' என்ற வசனத்தின்படி, என்னுடைய ஊழியத்திலும் பெரிய அளவில் பங்கு கொண்டார். கர்த்தர் எனக்கு கொடுத்த தேவ இராஜ்ய எச்சரிக்கை ஊழியத்தை பரிசுத்த ஆவியானவர் துணையோடு, ஐயா அவர்கள் பல சிரமத்தின் மத்தியிலும் செய்து வருகிறார். அவருக்காக என் ஜெபத்தில் அடிக்கடி வேண்டிக் கொள்கின்றேன். எனவே ஐயாவுடைய இந்த வயதான நாட்களிலும் கர்த்தர் அவரை விசேஷமாக பாதுகாத்து, அவர் குடும்பம் முழுவதையும் ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,
உங்கள் அன்பு ஆசிரியர்
வி.மரியா (எ) மிரியாம்

தேதி: 15.12.17

முகவரி:
எண்.7ஏ, முதல் மாடி,
கான்வென்ட் வீதி,
நெல்லித்தோப்பு அஞ்சல்
புதுச்சேரி – 600 005.
செல்: 9688748968.

1
ஆசிரியரின் சாட்சியும் தேவன் தந்த வெளிப்பாடும்

என் அன்பு சகோதர சகோதரிகளே1

வி.மரியாவாகிய நான் 'இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பிறகு இப்பூமியில் நடக்கப் போகும் சம்பவங்கள்' என்ற இந்த நான்காவது புத்தகத்தை கர்த்தருடைய கிருபையால் எழுதி உள்ளேன். இதன் மூலமாக மீண்டும் உங்களை சந்திக்க தேவன் தந்த மகா பெரிய கிருபைக்காக, தேவனுக்கு கோடான கோடி நன்றி கூறுகிறேன். ஆண்டவரின் வருகை இன்னும் தாமதிப்பதற்காக கர்த்தருக்கு நன்றி சொல்லுங்கள். ஒருவேளை நீங்கள் படிக்கும் இந்த புத்தகம், ஆண்டவர் இயேசுவின் வருகைக்குப் பிறகு உங்கள் கையில் கிடைத்திருக்குமானால் அதற்கும் நன்றி சொல்லுங்கள். ஏனென்றால் இன்னும் பூமியில் வாழும் **தேவப் பிள்ளைகளாகிய நீங்கள் ஆண்டவரைப் பற்றி அறிய வேண்டிய இரகசியங்கள் ஏராளம். அதை இரண்டு வகையாக மத்தேயு 24:3–இன் படி பிரிக்கலாம்.**

ஒன்று ஆண்டவரின் வருகைக்கு முன்பு நடக்கும் சம்பவங்கள், அடுத்து ஆண்டவர் வருகைக்கு பின்பு நடக்கும் சம்பவங்கள் ஆகும். இவ்விரண்டிலும் முக்கியமாக நடக்கப் போகும் ஒருசில சம்பவங்களின் வெளிப்பாட்டை, தகுதியில்லா இந்த அடிமைக்கு வேத வசன விளக்கத்தோடு ஆவியானவர் வெளிப்படுத்தினார். 2 பேதுரு 3:18இன்படி இன்னும் ஆண்டவருடைய அறிவை அறிந்து கொள்ள ஆவலாய் இருப்போமானால் சங்கீதம் 50:23–இன்படி நாம் வாழ்கிற வாழ்க்கையை, தேவன் விரும்புகிற வகையில் முற்றிலும் சரிப்படுத்த வேண்டும். அப்போது லூக்கா 8:17, ஆமோஸ் 3:7, யாக்கோபு 1:5 என்ற வசனத்தின்படி நிச்சயம் உங்கள் அனைவருக்கும் வெளிப்படுத்துவார். இவ்வாறு அடியாளுக்கு வெளிப்படுத்திய இரகசியத்தை, ஏற்கனவே நான் மூன்று புத்தகத்தில் எழுதி வெளியிட்டுள்ளேன். அதன் சுருக்கத்தை இப்பொழுது கொஞ்சம் பார்ப்போம்.

முதலாவது '666' என்ற பயோமெட்ரிக் சிப் ஆட்சிக் காலம் ஆண்டவர் வருகைக்கு முன்பாக சட்டமாக வரும் (2 தெச. 2:2–3). இந்த ஆட்சிக்காலம் சில நாட்கள் மட்டுமே இருக்கும். ஒரு வருட காலத்திற்குள் அதாவது ஒரு மாதமோ அல்லது 10 நாட்களோ கட்டாயம் முடிந்து விடும். (ஏரேமியா 51:46, வெளிப்படுத்தல் 17:12, வெளி 2:10, 1கொரிந்தியர் 10:13) இன்படி இந்த ஆட்சி குறுகிய காலமே இருக்கும். எனவே இந்த **பயோ மெட்ரிக் சிப்பை தேவ பிள்ளைகள் யாரும் உடம்பில் போட்டுக் கொள்ளவே கூடாது.**

இந்த அந்தி கிறிஸ்து ஆட்சி அதாவது பயோ மெட்ரிக் சிப் பதிய வேண்டுமென்ற சட்டம் பயங்கரமாக நடந்து கொண்டிருக்கும்போதே, திடீர் என்று ஒரு நாள் உலகம் இருளாகும் – (மத்தேயு 24:29–31, ஏசாயா 60:2). இதுவே இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகைக்கு முன்பு நடக்கப் போகும் இயற்கையின் கடைசி அடையாளமாகும். கர்த்தர் வெளிப்படுத்திய இக்காரியங்களை ஏற்கனவே இரண்டு புத்தகங்களில் எழுதி உள்ளேன். இதைத் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஆண்டவரின் வருகை நாட்களில் நடக்கப் போகும் சம்பவங்களை என் கண் முன் வைத்து ஜெபித்தேன். அப்போது ஒருநாள் தினத்தந்தி பேப்பரில் 'பூமியை மிரட்டும் சூரிய புயல்' என்ற தகவலைப் படித்தேன். அந்த தகவலில் உலகமெங்கும் 6 நாட்கள் இருள் சூழும் என்றும், காற்றுகள் அதி பயங்கரமாக வீசும் என்றும் போடப்பட்டிருந்தது. இந்த தகவலின்படி வேதத்தை ஆராய்ந்தேன்.

அப்போது காற்றுகள் பற்றி அநேக இடங்களில் அதாவது மத்தேயு 7:25, வெளிப்படுத்தல் 7:1–3, யாத்திராகமம் 15:10, எண்ணாகமம் 11:31, ஆதியாகமம் 8:1, ஏசாயா 11:15, ஏசாயா 27:8–இல் போடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட காற்றுகள் ஆண்டவரின் வருகை நாளில் இருள் தொடங்கியவுடன் லேசாக வீச ஆரம்பித்து, இயேசு கிறிஸ்து மேகத்தில் தோன்றும் வரை வீசும். இயேசு கிறிஸ்து மேகத்தில் தோன்றியவுடன் தூதர்கள் அதிவேகத்துடன் காற்றுகளைப் போல, ஒரே நிமிடத்தில் கீழே இறங்கி வந்து தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகளை எடுத்துக் கொள்வார்கள். எபிரேயர் 1:7, மத். 24:31, 1கொரிதியர் 15:51 என்ற வெளிப்பாட்டைக் கொடுத்தார். இந்த வெளிப்பாட்டின் இரகசியத்தை விளக்கமாக இந்த புத்தகத்தில் எழுதியுள்ளேன். **காற்றுகள் ஆண்டவரின் வருகை நாட்களில் எதற்காக வீசும் என்பதையும் வேதத்தில் தியானித்தேன்.**

அப்போது சுழற் காற்றுகள் எலியா தீர்க்கதரிசியை உயிரோடு எடுத்துச் சென்றது என்பதையறிந்தேன். – (2 இராஜாக்கள் 2:11).

அதுபோல உலகில் சுமார் 700 கோடிக்கு மேல் மக்கள் வாழ்ந்தாலும், குறைந்தது 7 கோடி தேவ பிள்ளைகளாவது தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இருப்பார்கள் அல்லவா? அவர்களை கூட்டிச் செல்ல அத்தனை கோடி தூதர்களும் மத் 24:31–இன்படி இறங்கி வருவார்கள். அப்படி இறங்கி வருவதற்கும், மீண்டும் தேவ பிள்ளைகளோடு மேலே பறந்து போவதற்கும்தான் கொண்டல் காற்றுகள், கோராவாரி காற்றுகள், புயல் காற்றுகள் மற்றும் சுழல் காற்றுகளும் அதிகமாக வீசும். கர்த்தருடைய வழி காற்றின் மூலம் இருக்கிறது. எனவே ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகை நாளிலும், உலக முடிவு நாட்களிலும் நாகூம் 1:3, ஏசாயா 60:2–இன் படியும் இருள் சூழும். காற்றுகள் வீசும்.

இந்த இரண்டு இயற்கை காரியங்களோடு பூமியதிர்ச்சியும் எக்காள சத்தமும் கேட்கும். அப்போது நீங்கள் ஏசாயா 26:20, மாற்கு 13:15–16 ஆம் வசனத்தின்படி எங்கும் போகாமல் இருக்கிற இடத்திலேயே இருக்க வேண்டும். பயப்படக் கூடாது. ஏனென்றால் ஒவ்வொரு தேவப் பிள்ளைகள் வாழ்கின்ற இடத்தையும், குடியிருப்பின் எல்லைகளையும் நம் பிதாவானவர் முன்குறித்து வைத்திருக்கிறார். – (அப்போஸ்தலர் 17:26). எனவே தேவப் பிள்ளைகளை கூட்டிச் செல்ல தூதர்கள் வரும்போது அவரவர்கள் வீட்டில் ஜெபித்துக் கொண்டு அமைதலாக பதட்டம் இல்லாமல், உங்கள் மீட்பிற்காகக் காத்திருங்கள்.

ஏன் இதை உங்களுக்கு எழுதுகிறேன் என்றால் லோத் குடும்பத் திற்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டு இருந்தும், அவனுடைய மனைவி மட்டும் திரும்பிப் பார்த்து உப்புத் தூணாய் மாறினாள். எனவேதான் தேவனுடைய சினம் வரும்போது இருக்கிற வீட்டிலேயே, ஆண்டவர் உங்களை இருக்கச் சொல்கிறார். – (ஏசாயா 26:20). **கடைசி நாட்களில் நடக்கும் சம்பவங்கள் குறித்து அநேக ஊழியக்காரர்கள் தெளிவாய் போதிப்பது கிடையாது. எனவே எல்லோரும் கலங்கி கவலைப்படுவார்கள் (லூக்கா 21:35–36). ஆனாலும் நம் பிதாவும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் யோவேல் 3:16, மத்தேயு 28:20 இன்படியும், உலக முடிவு பரியந்தம் வரை உங்களோடு இருப்பார்.** எனவே ஆண்டவர் வருகை நாட்களில் எப்படிப்பட்ட

அடையாளங்கள் நடந்ததோ, அதைப் போல மீண்டும் உலக முடிவு நாட்களிலும் இருள் சூழ்ந்து காற்றுகள் வீசும். மனம் மாறிய, கை விடப்பட்ட தேவ பிள்ளைகளை 1தெச. 4:16–17இன்படி கூட்டிச் செல்ல தூதர்கள் வருவார்கள். இப்படிப்பட்ட வெளிப்பாடுகளும், இன்னும் அநேக வெளிப்பாடுகளையும், வேதத்தின் மூலம் அறிந்துகொள்ள அடியாளுக்கு தேவன் பாராட்டிய இந்த கிருபைக்காக, கோடான கோடி நன்றி கூறுகிறேன். நீங்களும் படித்து தெரிந்து கொண்ட இந்த வெளிப்பாட்டிற்கு நன்றி கூறுங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

என்னுடைய சாட்சி

தேவ பிள்ளைகளே! நாம் பூமியில் கர்த்தரைத் தேடி வாழும்போது, தேவனுடைய எல்லா ஆசீர்வாதங்களையும் மத். 6:33, உபாகமம் 28:1–19இன்படி நிச்சயம் நமக்கு தருவார். இந்த நம்பிக்கையில் கர்த்தருடைய சமூகத்தில் எப்போதும் காத்திருப்பேன். அதன்படி என் மூத்த மகள் விமலாவுக்கு திருமணமாகி 5 வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லை. ஆனால் இளைய மகள் அமலாவிற்கு திருமணமாகி ஒரு வருடத்திலேயே குழந்தை பாக்கியம் கிடைத்து அழகான ஆண் பிள்ளையை கடந்த 2016 செப்டம்பர் மாதம் 7ம் தேதி பெற்றாள். அக் குழந்தைக்கு **'லெவின் ஜெப்ரி'** என்று கர்த்தரே, லேவி கோத்திரத்தாரின் பெயரை வைக்க என் மகளுக்கும் மருமகனுக்கும் ஆலோசனை கொடுத்தார்.

கர்த்தருக்கென்று பிள்ளையை ஒப்புக் கொடுத்தார்கள். எங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டது. எப்படியெனில் குழந்தை பிறந்து 4 நாட்கள் கண்ணாடி ரூமில் வைத்திருந்தார்கள். குழந்தைக்கு மூச்சுத் திணறல் இருந்தது. மருத்துவமனையில் தாயும் பிள்ளையும் பிரிந்திருந்து 5 ஆம் நாள்தான் பார்த்தார்கள். என் மகள் விசுவாசத்தில் உறுதியாய் இருந்தபடியால் தேவசித்தம் நிறைவேறியது. எரேமியா 1:5–இன்படி என் பேரனை தாயின் வயிற்றில் இருக்கும்போதே கர்த்தர் தெரிந்து கொண்டார் என்பதை நினைத்து சந்தோஷப்பட்டேன்.

இதேபோல் என் மூத்த மகளுக்கும் திருமணமாகி 5 வருடங்கள் குழந்தையில்லை. ஆனால் திடீரென்று தாங்க முடியாத வயிற்று வலியால் ஒரு சில நாட்கள் வேதனைப்பட்டாள். உடனே மருத்துவரிடம் அழைத்துச் சென்றோம். அவர்கள் ஸ்கேன், இரத்தப்

பரிசோதனை என்று ஒரு சில பரிசோதனைகள் செய்து, கரு டியூபில் 3 வாரம் தங்கியிருப்பதைக் கண்டுபிடித்தார்கள். டியூபில் தங்கினால் உயிருக்கு ஆபத்து என்று சொல்லி கர்த்தருடைய கிருபையால் உடனே மருத்துவமனையில் அட்மிட் செய்தார்கள். ஆபரேஷன் இன்றி ஊசி மூலம் டியூப் கரு கலைந்து போக கர்த்தர் உதவி செய்தார். அவள் உயிர் காக்கப்பட்டது. அப்போது எங்கள் வீட்டிற்கு ஒரு ஊழியக்காரர் வந்தார். அவருடைய உறவினரின் பெண்ணுக்கு இவ்வாறு கரு டியூபில் தங்கியதால் 45 ஆம் நாள் அந்தப் பெண் டியூப் வெடித்து இறந்து விட்டாள். பரவாயில்லை உங்கள் மகளுக்கு தேவன் வயிற்று வலியைக் கொடுத்து, மூன்றே வாரத்தில் வரவிருந்த ஆபத்தைத் தடுத்து விட்டார் என்று சொல்லி ஜெபம் செய்துவிட்டு சென்றார்.

தேவப் பிள்ளைகளாகிய நாங்கள் எபிரேயர் 12:5–இன்படி சோதனையின் மத்தியிலும் விசுவாசத்தில் நிலைத்து நிற்கிறோம். என் மூத்த மகளுக்கும் வரும் காலங்களில் குழந்தை பாக்கியத்தைக் கொடுத்து கர்த்தர் ஆசீர்வதிப்பார் என்று விசுவாசிக்கிறேன். தேவப் பிள்ளைகள் முழு விசுவாசத்தில் நிலைத்து நிற்கிறார்களா என்று எபிரேயர் 12:5–10இன்படி சிட்சித்து புடமிடுவார். ஆபிரகாமை நம் பிதாவானவர் அப்படித்தானே சோதித்தார். எனவே நீங்களும் விசுவாசத்தில் எப்போதும் நிலைத்திருங்கள்.

பரிசுத்த ஆவியானவரைக் குறித்த சாட்சி

நமக்குள் வாசம் செய்து கொண்டிருக்கும் பரிசுத்த ஆவியானவர், நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வீட்டிலும் தங்கியிருக்கிறார். எனவேதான் மத்தேயு. 7:24–இன்படி என்ன ஆபத்து வந்தாலும் நம் வீடும் பாதுகாக்கப்படுகிறது. எப்படியெனில் ஊழியத்தின் மூலமாக எனக்கு அடிக்கடி செல்போன் அழைப்புகள் வரும். ஒருநாள் சமைத்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று செல்போன் அழைப்பு வந்தது. அப்போது சமையலறையில் தீயை அணைக்க மறந்துவிட்டு நடைபாதைக்குப் போய் சில நிமிடங்கள் கைபேசியில் பேசிக் கொண்டு இருந்து விட்டேன்.

தூரத்தில் இருந்து சமையல் ரூமை பார்க்கும்போது ரூம் முழுவதம் அதிக புகையாக இருந்தது. உடனே வேகமாக சமையல் அறைக்கு நடந்து வருவதற்குள் வாணலியில் எண்ணெய் பற்றி எரிய ஆரம்பித்து விட்டது. வீட்டில் யாரும் இல்லை. நான்

சற்றும் பயப்படாமல் மீண்டும் நடை பாதைக்கு வேகமாக நடந்து சென்று, அங்கு வைத்திருந்த மணல் வாளியைத் தூக்கி வந்து எரிகிற வாணலியில் கொட்டினேன். உடனே தீ அணைந்தது. அப்போது வீட்டில் கேஸ் முழுவதும் உள்ள வேறு சிலிண்டரும் இருந்தது. விபத்து ஏற்பட்டிருந்தால் பயங்கரமாக இருந்திருக்கும். நம் தேவன் எபிரேயர் 12:29–இன்படி பட்சிக்கிற அக்கினியில் இருக்கிறார். எனவேதான் ஏற்ற நேரத்தில் ஆவியானவர் ஆலோசனை கொடுத்தார். வர இருந்த ஆபத்திலிருந்து அந்நாளில் காப்பாற்றினார். எந்தவித உலக வேலையாக இருந்தாலும் தேவ சிந்தையோடு செய்யும்போது, நிச்சயம் தேவன் நம் எல்லோரையும் பாதுகாக்க வல்லவராய் இருக்கிறார்.

மேலும் என்னுடைய தேவைகளுக்காக ஜெபிக்கும்போது, ''**நீதிமானுக்கு ஒரு குறையும் வராது**'' என்று சொன்னீரே, இந்த வசனத்தின்படி என் விண்ணப்பத்தை நிறைவேற்றும். அதுவும் உம்முடைய சித்தமாய் இருக்குமானால் உதவி செய்யும் என்றுதான் ஜெபிப்பேன். அதுபோலவே **நீங்களும் உங்களுடைய தேவைகளுக்காக வாக்குத்தத்தமான வசனங்களை சொல்லி ஜெபியுங்கள். நிச்சயமாக தேவன் உதவி செய்வார்.** பரிசுத்த ஆவியின் துணையோடு நான் செய்து வருகின்ற இந்த எச்சரிக்கை ஊழியத்திற்காக நீங்களும் எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

என்னுடைய ஊழியத்திற்கு என் கணவர் வில்லியம் வினோபா, என் இரண்டு பெண் பிள்ளைகள் **செயின்தாமஸ் விமலா, செயின் தாமஸ் அமலா**, மருமகன்கள் திரு. **இரா.ஜோயல் வினோத்,** திரு. **நா.லோகநாதன்** ஆகியோர் உதவியாக இருக்கிறார்கள். என்னுடைய உடன்பிறந்த சகோதர சகோதரிகளும் மற்றும் அநேக தேவ பிள்ளைகளும் ஜெபத்தின் மூலமாக உதவி செய்து என்னைத் தாங்குகிறார்கள். எனவேதான் நான் சமாதானத்தோடு ஊழியம் செய்து வருகின்றேன். இந்த நான்காம் புத்தகத்தையும் தேவன் அங்கீகரித்துக் கொண்டார் என்பதற்கு அடையாளமாக இதற்குண்டான பணத் தொகையை சிபிஎம் சபையைச் சேர்ந்த ஸ்டெல்லா என்ற சகோதரி ஏற்றுக் கொண்டார். கர்த்தர் அவர்களையும், அவருடைய குடும்பத்தையும் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக!

2
இப்புத்தகம் எழுதுவதற்கான நோக்கம்

அன்புள்ள சகோதர சகோதரிகளே! இப்புத்தகம் எழுதுவதின் முக்கிய நோக்கம் இனிவரும் காலங்களில் இப்பூமியில் நடக்கப் போகும் சம்பவங்கள்பற்றி அநேக தேவப் பிள்ளைகளுக்கு தெளிவாகத் தெரியவில்லை. இதை எப்படியாவது எல்லா தேவ பிள்ளைகளும் பிரசங்கி 11:2, லூக்கா 8:17–இன்படி அறிந்து கொள்வதற்காகவே இப்புத்தகத்தை எழுதியுள்ளேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தகுதியில்லாத அடிமையான என்னையும் எடுத்து, அவருடைய வருகையின் எச்சரிப்பு ஊழியம் செய்ய, அப்போஸ்தலர் 2:18–இன்படி தெரிந்து கொண்டார்.

எப்படியெனில் என்னுடைய ஜெப நேரத்தில் அடிக்கடி இப்பூமிக்கும் பரலோகத்திற்கும் எப்படியெல்லாம் தொடர்பு இருக்கிறது? தேவ பிள்ளைகள் இனியிருக்கும் குறுகிய காலத்தில் எப்படி வாழ வேண்டும்? முக்கியமாக எதற்காக ஜெபிக்க வேண்டும்? எப்படி ஆயத்தமாக வேண்டும்? என்பதைப் பற்றி தேவனோடு பேசி கேட்டுக் கொண்டே இருப்பேன். ஏனென்றால் இன்றும் அநேக ஊழியக்காரர்கள் பைபிளில் உள்ள ஆபிரகாம் ஈசாக்கு, யாக்கோபு, தாவீது, தானியேல், யோனா இன்னும் பல தீர்க்கதரிசிகளைப் பற்றிப் பேசிப் பேசி ஆராதனையை முடிக்கிறார்கள். ஆசீர்வாதமான வார்த்தைகளை கூறி தேவப் பிள்ளைகளை அனுப்பி விடுகிறார்கள். முழுமையான எச்சரிக்கை கட்டளை காரியங்களைக் குறித்த வசனங்களை போதிப்பது கிடையாது.

மாற்கு 7:7–இல் சொல்லப்பட்டபடி ஊழியக்காரராக இருக்கும் அநேகர் அவர்களுடைய மனதில் தோன்றுகிற கட்டளைகள் கற்பனைகளின்படி சபை விசுவாசிகளை நடத்துகின்றனர். ஊழியக்காரர்கள் சொல்லும் வார்த்தைகளை மட்டும் விசுவாசிகள் கேட்கும்படி செய்கிறார்கள். இதனிமித்தம் விசுவாசிகள் பிதாவின் சித்தத்தை முழுமையாக அறிய முடியாமல் இன்று சுய போதகத்தை போதித்த ஊழியக்காரர்களோடு கைவிடப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இப்புத்தகத்தை படிக்கும் தேவ பிள்ளைகளே! நீங்கள் எப்படிப் பட்ட நிலையிலிருக்கிறீர்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். முழு

சத்தியத்தையும் அறிந்திருக் கிறீர்களா? அல்லது குடும்ப சூழ்நிலை காரணமாக, தேவனுடைய பிள்ளையாய் முழுமையாய் வாழ முடியவில்லை என்ற தவிப்போடு இருக்கிறீர்களா? இனிமேலாவது 1கொரிந்தியர் 5:11, லூக்கா 14:26 வசனங்களைப் படித்துப் பாருங்கள். உங்களின் இரட்சிப்புக்கு உங்கள் உறவினர்கள் தடையாக இருப்பார்களானால், அவர்களை வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிட்டு தனிமையில் இயேசு கிறிஸ்துவை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு எல்லா விதத்திலும் போதுமானதாக இருப்பார். குடும்பமாக இருக்கிறது எப்படி விலகுவது என்று எண்ண வேண்டாம். கொஞ்ச காலம் பிரிந்திருந்தால், அவர்களே உங்களை தேடி வந்து உன் தெய்வத்தை வணங்கிக் கொள் என்று சொல்வார்கள். உங்களுக்கு எந்த ஒரு பிரச்சினையும் செய்ய மாட்டார்கள். அவர்களே தேவ பிள்ளையாக மாறவும் வாய்ப்பு உண்டு. அப்படியொரு மாற்றத்தை நம் இரட்சகர் இயேசு கிறிஸ்து நிச்சயம் செய்வார் – அப்போஸ்தலர் 16:31–32.

எனவே **வருகைக்குப் பிறகு ஒருவேளை கைவிடப்பட்ட நிலையில் பூமியில் வாழ்வீர்களென்றால் முதலாவது பயப்பட வேண்டாம். விட வேண்டிய ஒருசில செயல்கள் உண்டு. அதை ஆராய்ந்து பார்த்து விட்டு விடுங்கள். வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட தேவ பிள்ளைகளைத் தேடி அவர்கள் எப்படி ஆண்டவருக்காக வைராக்கியமுடன் வாழ்ந்தார்களோ, அதன்படி வாழ முயற்சி செய்யுங்கள்.** கைவிடப்பட்ட ஊழியக்காரர்களும் இருப்பார்கள். அவர்கள் இன்றும் எங்களுக்கு கொடுக்கப்பட்ட ஆலய கட்டிட வேலைகள், ஊழிய வேலைகளை முடிக்கவில்லை என்று சொல்வார்கள். அதனால்தான் நாங்களும் கைவிடப்பட்டு விட்டோம் என்று பொய் சொல்லி பழையபடியே சபையில் ஆராதனை நடத்துவார்கள். எனவே ஊழியக்காரராய் இருந்தாலும் முழுமையாய் நம்ப வேண்டாம் என்பதற்காகவே ஏசாயா 2:22–இல் இப்படியாகச் சொல்லப்பட்டுள்ளது.

வருகையில் மேலே போன பிள்ளைகள் வாழ்ந்த வாழ்க்கையும், அவர்கள் கைப்பட எழுதிய சுவிசேஷ சாட்சியும், நீதியாகிய சத்தியமும், மத் 29:14, ஏசாயா 26:9–இன்படி உங்களை வழி நடத்தும். மேலும் 2 நாளாகமம் 7:14, மீகா 1:3–7 வரை படித்துப் பார்ப்பீர்களென்றால், கர்த்தருடைய பிள்ளைகள் கத்தோலிக்க திருச்சபையில் இருந்தாலும் அனைவரும் இயேசு என்ற நாமத்தை அறிந்தவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இதுவரை நீதியாகிய கட்டளை வசனங்களை கடைப்பிடிக்காமல், செய்த

பாவத்தினாலும் மீறுதலினாலும்தான், இந்த தேசத்திற்கு அழிவு வருகிறது. ஆகவே முதலாவது தேவப் பிள்ளைகள் அனைவரும் முழு மனதுடன் மனம்மாற வேண்டுமென்று நம் ஆண்டவர் சொல்லுகிறார். அதைத்தான் இயேசு கிறிஸ்துவும் '**எனக்காக அழ வேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் முதலாவது அழுங்கள்**' என்று கூறுகிறார் – (லூக்கா 23:28).

எனவே இந்த கடைசி நாளிலும் ஊழியம் ஊழியம் என்று சொல்லி அலைந்து திரிந்து கொண்டு உங்கள் ஆத்துமாவை இழந்து விட வேண்டாம். (யாக்கோபு 3:1) இந்த வசனத்தின்படி எச்சரிக்கையாக, ஜாக்கிரதையாக வாழுங்கள். தேவப் பிள்ளைகள் அனைவரும் தங்கள் பாவங்களை விட்டு முழுமையாய் மனம் மாற வேண்டும். மேலும் பாரத்தோடு 2 நாளாகமம் 7:14, எசேக்கியேல் 9:4–இன்படி எல்லா தேவ பிள்ளைகளும் மனம் மாறுவதற்காக ஜெபியுங்கள்.

அப்போது தூதர்கள் உங்கள் நெற்றியில் இவர்கள் தேவப் பிள்ளைகள் என்று அடையாளம் போடுவார்கள். இனிமேல் இந்த பூமிக்கு நடக்கப் போகும் சம்பவங்கள் என்ன? என்பதை ஒரு சில தீர்க்கதரிசிகளுக்கு ஆமோஸ் 3:7இன்படி வெளிப்படுத்தியிருக்கிறார். கைவிடப்பட்ட தேவப் பிள்ளைகள் யாரையும் நம்பி ஏமாந்து போக வேண்டாம். எப்படி வாழ வேண்டுமென்று அழுது ஜெபியுங்கள். பரிசுத்த ஆவியானவர் எசேக்கியேல் 11:16–இன்படி கொஞ்ச காலம் உங்களை நிச்சயம் வழி நடத்துவார். இந்த அடியாளுக்கும் உலகம் முடியும் வரை நடைபெறும் இரகசியத்தை தாகத்தோடு கேட்டதால், வெளிப்படுத்தல் 8, 16, 19 அதிகாரங்கள் முழுவதிலும் உள்ள அத்தனை ஆபத்துக்களும் நடக்கும் என்று வெளிப்படுத்தினார். இந்த அதிகாரங்களை கைவிடப்பட்ட தேவ பிள்ளைகள் தயவு செய்து படியுங்கள். இதை எல்லா தேவப் பிள்ளைகளும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்புத்தகத்தை எழுதி உள்ளேன்.

கைவிடப்பட்ட தேவப் பிள்ளைகளுக்கு மீண்டும் ஒரு இரட்சிப்பு உண்டு (ஏசாயா 11:11–12), எண்ணாகமம் 15:40இன்படி எல்லாவிதமான கட்டளைகளையும், கற்பனைகளையும் கடைப்பிடித்து சீக்கிரத்தில் பரிசுத்தமாகுங்கள். இப்புத்தகத்தைப் படிக்கும் தேவப் பிள்ளைகள் அனைவரும் நிச்சயம் தேவ ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் என்று விசுவாசிக்கின்றேன். கர்த்தர் தாமே உங்களோடு இருப்பாராக! ஆமென்.

3
வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகள் எங்கே இருப்பார்கள்?

அன்பின் தேவ பிள்ளைகளே! உலகமெங்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் உலக முடிவையும் எதிர் நோக்கி இருக்கிறார்கள். எல்லா சபைகளிலும் இந்த செய்தி பற்றி அறிவிப்பு கொடுத்து வருகிறார்கள். நானும் கண்கூடாக இந்த உலகத்தில் நடக்கிற சம்பவங்கள் அனைத்தும், நம் பைபிளில் உள்ளபடி நடக்கிறது என்பதை உணர்ந்தேன். எனவே இனி நடக்கப் போகும் சம்பவங்கள் பற்றியும், வருகையில் எடுத்துக் கொள்ளப் போகிற பிள்ளைகள் எங்கே இருப்பார்கள், அதற்குப் பிறகு இவ்வுலகில் என்ன நடக்கும் என்பதை ஆவலாய் ஜெப சிந்தையோடு பிதாவிடத்தில் கேட்க ஆரம்பித்தேன்.

யாக்கோபு 1:5, மத்தேயு 5:5–இன்படி பரிசுத்த ஆவியானவர் துணையுடன் வெளிப்படுத்தல் அதிகாரத்தைப் படித்தேன். வெளிப்படுத்தல் 1:1–இன்படி இனி நடக்கப் போகும் சம்பவங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தேன். எந்தவிதமான விளக்கம் எனக்கு தேவையென்றாலும் கடைசி புத்தகமாகிய வெளிப்படுத்தலை பலமுறை படிப்பேன். வெளிப்படுத்தல் 15:1–5, மத்தேயு 24:39–42இன்படி ''**பூமியில் பிதாவின் சித்தத்தின்படி வாழ்ந்து தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகள், இரண்டாம் வருகையில் மகிழ்ச்சியோடு பறந்து போவார்கள்.**''

பரலோகத்தில் அக்கினி கலந்த கண்ணாடி கடலருகே, சாட்சியின் கூடாரம் என்ற ஓர் ஆலயம் உள்ளது. அங்கு போய் தங்கியிருப்பார்கள் என்பதை வெளிப்படுத்தினார். அங்கு அவர்கள் மகிழ்ச்சியோடு பாடல்களைப் பாடி போற்றித் துதித்துக் கொண்டிருப்பார்கள். உம்முடைய வழிகள் நீதியும் சத்தியமும் ஆனவைகள். பூமியில் நாங்கள் வாழும்போது எல்லா கட்டளைகள் கற்பனைகளையும் கடைப்பிடித்து வாழ்ந்தோம். நீர் வருவீர் எங்களை அழைத்துச் செல்வீர் என்று சொல்லப்பட்டபடி, உம்மோடு அழைத்து வந்து விட்டீர். உம்முடைய நீதியின் செயல்களை உலகத்தில் அனைவரும்

பார்க்கும்படி ஏசாயா 26:9இன் படி வெளியரங்கமாக்கி விட்டீர். என்றும் போற்றித் துதித்து மகிமைப்படுத்திக் கொண்டிருப்பார்கள். எப்படியெனில் **முதல் முறை ஆண்டவர் வருகையில் உயிரோடு எடுத்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகள், பிரசங்கி 12:13–இன் படியும், வெளிப்படுத்தல் 22:14–இல் எழுதியுள்ளபடி எல்லாக் கட்டளைகள் கற்பனைகளைக் கடைப்பிடித்தவர்கள் ஆவார்கள். பரலோகத்தில் பல வாசஸ்தலங்கள் உண்டு என்ற வசனத்தின்படி, பரலோகத்தில் அக்கினி கலந்த கடலருகே ஓர் ஆலயத்தின் அருகில் இவர்கள் கொஞ்ச காலம் தங்கியிருப்பார்கள்.** எவ்வளவு காலம் இருப்பார்கள் என்றால் பூமியில் கைவிடப்பட்ட மற்ற தேவப் பிள்ளைகளும், 1 தெசலோனிக்கேயர் 4:15–17இன் படி உயிரோடு இருப்பவர்களும், மரித்த முன்னோர் பிதாக்களும் உயிரோடு எழும்பி வரும்வரை, கண்ணாடி கடலருகே உள்ள இடத்தில் தங்கி அவர்கள் வருகைக்காக காத்திருப்பார்கள். தெரிந்து கொள்ளப்பட்ட தேவப் பிள்ளைகள் முதலில் பரலோகம் பறந்து போனாலும் பூமியில் கீழே உள்ள மற்ற தேவப் பிள்ளைகளும் பரலோகம் வந்து சேர வேண்டும். அவ்வாறு அனைவரும் வந்து சேர்ந்த பிறகுதான் 1000 வருட அரசாட்சி தொடங்கும் (வெளிப்படுத்தல் 20:21) என்ற தேவ இரகசியத்தை எனக்கு லூக்கா 8:17–இன்படி வெளிப்படுத்தினார். இந்த வெளிப்பாட்டை இப்புத்தகத்தின் மூலம் நீங்கள் தெரிந்து கொண்டதற்காக கர்த்தருக்கு கோடி கோடி நன்றி செலுத்துங்கள்.

4
ஆண்டவர் வருகைக்குப் பிறகு பரிசுத்த ஆவியானவர் இருப்பாரா?

கைவிடப்பட்ட தேவ பிள்ளைகளே! முதலாவது நீங்கள் பயப்படாமல் இருங்கள். நிச்சயமாக வருகைக்குப் பிறகு பரிசுத்த ஆவியானவர் கொஞ்ச காலத்துக்கு இருப்பார் – (எசேக்கியேல் 11:16). ஏனென்றால் பிதாவும் இயேசு கிறிஸ்துவும், '**உலக முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களோடு கூட இருப்பேன்**' என்று யோவேல் 3:16, மத்தேயு 28:20இல் வாக்குக் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் உங்களோடு இருக்கும்போது பயப்படவே வேண்டாம். இனி நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை சிந்தியுங்கள்! **உங்கள் வாழ்நாளில் எந்தெந்த கட்டளைக் குரிய வசனத்தின்படி நடக்கவில்லை என்பதை உடனே தேடிக் கண்டு பிடியுங்கள். நீதிக்குரிய கட்டளைகளை எப்படி கண்டு பிடிப்பது?**

உண்மையாக கட்டளைகளைக் கடைப்பிடித்து வாழ்ந்த தேவப் பிள்ளைகள், ஆண்டவர் இயேசுவோடு பறந்துபோய் விட்டார்களே என்று நினைக்கிறீர்கள் அல்லவா? கவலைப்படாதீர்கள். பரிசுத்த ஆவியானவர் இப்பூமியில் கொஞ்ச காலம் தங்கி நீங்களும் அவர்களைப் போல வாழ உதவி செய்வார். எப்படி எனில் தெரிந்து கொள்ளப்பட்ட தேவப் பிள்ளைகளில் யாராவது ஒருசிலர், கட்டளைக்குரிய வசனங்கள் அதைக் கடைப்பிடித்த விதம், மற்றும் அதன் ஆவிக்குரிய முழு விளக்கத்தையும் புத்தகமாக அல்லது பிரதிகளில் உபாகமம் 17:19–20, ஆபகூக் 2:2–இன்படி எழுதி வைத்திருப்பார்கள்.

நீங்கள் அவர்களின் வீட்டிற்கு சென்று அந்தப் பிரதியை வாங்கிக் கொள்ளுங்கள். இந்த சாட்சிப் பிரதிதான் மத்தேயு 24:14–இன்படி இராஜ்யத்துக்குரிய சாட்சியாகும். இந்த சாட்சிப் பிரதி கைவிடப்பட்ட தேவப் பிள்ளைகளுக்கு கிடைப்பதற்காகவே பரிசுத்த ஆவியானவர் இந்த பூமியில் கொஞ்ச காலம் தங்குவார். மேலே பரலோகத்துக்கு சென்ற பிள்ளைகள் வாழ்ந்த வீட்டை தேடிக் கண்டுபிடியுங்கள். பூமியில் அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை பரிசுத்த

ஆவியானவரே உங்களுக்கு காட்டிக் கொடுப்பார். அதன்படியே கைவிடப்பட்ட தேவப் பிள்ளைகளாகிய நீங்களும் வாழ்வதற்கு உதவி செய்வார். **ஏசாயா 11:10–13, எசேக்கியேல் 11:13–19, எபேசியர் 4:30 வசனங்களின்படி கொஞ்ச காலம் மட்டும் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்காக நிச்சயம் பூமியில் இருப்பார்.** மேலும் கைவிடப்பட்ட 3 பங்கு மக்களில் 1 பங்கு மக்கள் நிச்சயம் தேவ பிள்ளையாக வாழ முயற்சி செய்வார்களென்று பிதாவுக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் நன்றாகத் தெரியும் – (சகரியா 13:8–9). எனவே அவர்களுக்காகத்தான் ஆண்டவரின் இரண்டாம் வருகைக்குப் பிறகு, பரிசுத்த ஆவியானவர் இந்த பூமியில் கொஞ்ச நாட்கள் மட்டும் தங்குவதற்கு பிதாவானவர் அனுமதிக்கிறார்.

அதன்படியே கைவிடப்பட்ட தேவப் பிள்ளைகள் தங்கள் பாவத்தை விட்டு விலகி, கர்த்தருக்கு பயந்து அவர் பிள்ளைகளாக வாழ வேண்டுமென்று நினைப்பார்கள். அவர்களுக்கு எபேசியர் 4:30–ன்படி இந்தப் பூமியில் எந்தவிதமான ஆபத்து வந்தாலும், அவர்களை தாக்காதபடி பரிசுத்த ஆவியானவர் அவர்கள் நெற்றியில் முத்திரையிட்டு ஓர் பாதுகாப்பு வளையம் போடுவார் (வெளிப்படுத்தல் 9:4). அதற்கு பிறகுதான் பூமியை விட்டு பரிசுத்த ஆவியானவர், பரலோகம் பறந்து போய் விடுவார்.

ஆவியானவர் மேலே சென்ற பிறகு பூமியில் வாழும் ஒருவரும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் இனி கழுவப்பட மாட்டார்கள். அதாவது பிதா, குமாரன் பரிசுத்த ஆவியால் முழுக்கு, ஞானஸ்நானம் எடுக்க முடியாது. ஏனென்றால் ஞானஸ்நானம் எடுக்கும் பிள்ளைகளுக்கு பரிசுத்த ஆவியானவர் துணை நிச்சயம் வேண்டும் – (மத்தேயு 3:16). அவர் இல்லாமல் இயேசுவின் பிள்ளையாக மாற முடியாது. இயேசுவின் நாமத்தினால் அடையாள அற்புதங்கள் எதுவும் நடக்காது.

எப்படியெனில் ஓர் அலுவலகத்திலோ, அல்லது கல்லூரியிலோ சேர வேண்டுமென்றால் ஓர் குறிப்பிட்ட நாள் வரைதான் அப்ளிகேஷன் கொடுப்பார்கள். அதுபோல பரிசுத்த ஆவியானவர் இருக்கும் வரைதான் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்க முடியும். எனவே ஆண்டவரின் இரண்டாம் வருகைக்குப் பிறகு கொஞ்ச நாட்களிலேயே மனம் மாற வேண்டிய பிள்ளைகள், முற்றிலும் மனம் மாற வேண்டும். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத

பிள்ளைகள் யாராவது இருந்தால் அதாவது கைவிடப்பட்ட தேவப் பிள்ளைகளே இதுவரை முழுக்கு ஞானஸ்நானம் எடுக்காத, உங்கள் உறவினர்கள் மனம் மாற விரும்பினால், சீக்கிரத்தில் மனம் மாறி இயேசுவை ஏற்றுக் கொள்ள உதவி செய்யுங்கள்.

ஏனென்றால் **பரிசுத்த ஆவியானவர் மேலே போனவுடன், கிருபையின் காலம் முடிவடைந்து விடும். அதற்குப் பிறகு ஞானஸ்நானம் எடுக்க முடியாது. பரிசுத்த ஆவியானவர் மேலே போன பிறகு கைவிடப்பட்ட தேவப் பிள்ளைகள் எந்த ஊழியமும் செய்ய முடியாது என்ற வெளிப்பாட்டையும் வேத வசனத்தின் மூலம் எனக்கு வெளிப்படுத்தினார்.** அப்போஸ்தலர்கள் கூட பரிசுத்த ஆவி வந்த பிறகுதான் ஊழியம் தொடங்கினார்கள் – (அப்போஸ்தலர் 1:8–14). எனவே கைவிடப்பட்ட தேவ பிள்ளைகளே முதலாவது சீக்கிரத்தில் நீங்கள் முழுமையாய் மனம் மாற வேண்டும்.

5

பரிசுத்த ஆவியானவர் பரலோகம் திரும்பிச் செல்வதையும், கிருபையின் காலம் முடிவு பெற்றது என்பதையும் பூமியில் எப்படி அறிந்து கொள்வது?

அன்புள்ள தேவ பிள்ளைகளே! ஆண்டவரின் இரண்டாம் வருகைக்குப் பிறகு, நிச்சயமாக கொஞ்ச காலம் பரிசுத்த ஆவியானவர் இருப்பார் என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் அநேக ஊழியக்காரர்கள் ஆவியானவர் ஆண்டவரின் வருகைக்குப் பிறகு இப்பூமியில் இருக்க மாட்டார் என்று போதித்தது உண்டு. எனவே கைவிடப்பட்ட தேவ பிள்ளைகளுக்கு முதலில் பயமும், பிறகு இனி என்ன செய்ய வேண்டுமென்று தெரியாததால் குழப்பமும் உண்டாகும். கைவிடப்பட்ட தேவப் பிள்ளைகள் இனிவரும் நாட்களில் எப்படி வாழ வேண்டுமென்று, நீதியின் கட்டளைகளை பரிசுத்த ஆவியானவர் காண்பித்துக் கொடுப்பார். **'பயத்தின் ஆவியை நீக்கி விட்டு பலமும் தெளிந்த புத்தியையும் பரிசுத்த ஆவியானவர் கொடுப்பார்'** – (2 தீமோத்தேயு 1:7). பிறகு பூமியை விட்டு பரலோகம் போய்விடுவார். கிருபையின் காலம் முடிவடைந்து விடும். அதன் பின்பு பூமியில் இயற்கையின் ஆபத்துக்கள் ஒவ்வொன்றாகத் தொடங்கும்.

அதாவது வெளிப்படுத்தல் 8:1–இன்படி 7வது முத்திரை பரலோகத்தில் உடைக்கப்படும். ஆண்டவரின் வருகைக்குப் பிறகு பரிசுத்த ஆவியானவர் கொஞ்ச காலம் பூமியிலிருப்பதால் பரலோகமும் அமைதலாக 1/2 மணி நேரம் மட்டும் இருக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது – (வெளிப்படுத்தல் 8:1). இதன் ஆவிக்குரிய அர்த்தம் என்னவென்றால், **2 பேதுரு 3:8இல் ஒருநாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள் போலவும் இருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது.**

எனவே இவ்வசனத்தின்படி வெளிப்படுத்தல் 8:1–இல் சொல்லப் பட்ட 1/2 மணி நேர அளவும், அதாவது ஓர் ஆண்டு அல்லது

இரண்டு ஆண்டுகள், பரிசுத்த ஆவியானவர் ஆண்டவரின் வருகைக்குப் பிறகு பூமியில் இருப்பதால் அதிகளவு இயற்கை ஆபத்து நடக்காது. ஆனால் **பரிசுத்த ஆவியானவர் பரலோகம் சென்ற பிறகு, ஒவ்வொன்றாய் இயற்கை அழிவுகள் ஆரம்பிக்கும். அதாவது மகா உபத்திரவம் தொடங்கும். (வெளிப்படுத்தல் 8:7–13)–இன்படி கல் மழையும் அக்கினியும் முதலில் பூமியில் விழும். அப்போது மரம் செடி கொடிகளில் மூன்றில் ஒரு பங்கு எரிந்து அழியும். இரண்டாம் முறை பெரிய மலை போன்ற எரிகல் (அதாவது) எரி நட்சத்திரம் பூமியில் விழுவது போல் வரும். ஆனால் அந்த எரிகல் கடல்களில் விழும். அப்போது கடல் மீன் வகைகள் இறந்து போகும். கடல் நீர் இரத்தமாக மாறும். கப்பல்கள் 3இல் ஒரு பங்கு சேதமடையும்.**

மூன்றாம் முறையாக மீண்டும் ஒரு பெரிய எரிநட்சத்திரம் எரிந்து கொண்டே குடிநீருக்கு பயன்படும் நீர் ஊற்றுக்கள், ஆறுகள், அணைகள் மீது விழுவதால் குடிநீர் கசப்பாகும். மனிதர்கள் 3இல் ஒரு பங்கு பேர் அந்த நீரைக் குடிப்பதால் இறந்து போவார்கள்.

மேலும் சூரியன், சந்திரன் நட்சத்திரங்களில் 3–இல் ஒரு பங்கு பழுதடைந்து, உலகில் ஒரு சில இடங்கள் இருளாக மாறும். அந்த இருள் பல நாள் அப்படியே இருக்கும். பகலைப் பார்க்கவே முடியாது. அதைப் போலவே ஒரு சில இடங்களில் பகலாகவே இருக்கும். அவர்கள் இருளைப் பார்க்க முடியாது. இப்படிப்பட்ட அடையாளங்கள் எல்லாம் பரிசுத்த ஆவியானவர் பூமியில் இல்லாதபோது ஒவ்வொன்றாய் ஆபத்து நடக்கும். ஆனாலும் தேவப் பிள்ளைகள் பயப்பட வேண்டாம்.

மேலும் வெளிப்படுத்தல் 9:1–இன்படி மீண்டும் ஒரு பெரிய நட்சத்திரம் பூமியில் விழும். இதனால் சூரியன் வெப்பம் அதிகமாகும். கைவிடப்பட்ட நிலையில் வாழும் மக்களில் தேவனை ஏற்றுக் கொள்ளாமல் வாழ்பவர்களை இந்த வெப்பம் அதிகமாகத் தாக்கும். தேவப் பிள்ளையாய் வாழாமல் இருப்பவர்களுக்கு '666' பயோ மெட்ரிக் சிப் உடம்பில் போட்டதின் நிமித்தம் வேதனைகள் பெருகும். அவர்கள் சாவைத் தேடி போனாலும் அவர்களுக்கு சாவே வராது – (வெளிப்படுத்தல் 9:6)

சில நாட்கள் கழித்து '**கர்த்தரால் கொலையுண்டவர்கள் அநேகராய் இருப்பார்கள்**' என்ற வசனத்தின்படி உலக முடிவு கடைசி நாட்களில் அநேக துன்பங்கள் 3இல் ஒரு பங்கு, தேவனுடைய கோபக் கலசம் சூரியன் மேல் ஊற்றப்படுவதால் சூரிய வெப்பம் தாங்காமல் இறந்து போவார்கள் – (வெளிப்படுத்தல் 9;13,18). இப்படிப்பட்ட நிகழ்வுகள் பூமியில் நடக்கும். இதன் மூலம் பரிசுத்தஆவியானவர் இப்பூமியில் இல்லை என்பதை கைவிடப்பட்ட தேவ பிள்ளைகள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று ஆவியானவர் வெளிப்படுத்தினார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

குறிப்பு: **கைவிடப்பட்ட தேவ பிள்ளைகளே பூமியில் எரி நட்சத்திரம் விழப் போகிறது என்று எத்தனை முறை செய்திகள், பேப்பர்கள் மூலம் அறிவிப்புகள் வந்தாலும் பயப்படவே வேண்டாம்.**

6

ஆண்டவர் வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகள் நிச்சயம் பரலோகம்தான் போய் இருப்பார்களா என்பதை எப்படி உறுதி செய்வது?

என் அன்பு தேவப் பிள்ளைகளே! முதலாவது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், உலகமெங்கும் இருள் சூழ்வது, காற்று வீசுவது போன்ற முக்கிய இயற்கை சம்பவங்கள் நடக்கும். இது ஏசாயா 60:2, வெளிப்படுத்தல் 7:1, மத்தேயு 24:29, மத்தேயு 7:25, நாகூம் 1:3–இன்படி உறுதியானது. தெரிந்து கொள்ளப்பட்ட தேவ பிள்ளைகள் காற்றின் மூலம் தூதர்களோடு பரலோகம் பறந்து போய் இருப்பார்கள். இவர்கள் பறந்து போவதற்கு முன்பாக தூதர்கள் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகளுக்கென்று, ஒவ்வொருவருக்கும் ஒரு வெண் வஸ்திரம் பரலோகத்தில் இருந்து வரும் போதே எடுத்துக் கொண்டு வருவார்கள். வெளிப்படுத்தல் 3:4–5–இன்படி வெண் வஸ்திரம் எதற்கென்றால் ஒவ்வொரு தேவப் பிள்ளைகளும் எத்தனையோ பாவ வாழ்க்கையிலிருந்து, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள் ஆவார்கள்.

குறிப்பாக தெரிந்து கொள்ளப்பட்ட தேவப் பிள்ளைகள், இந்தப் பூமியில் வாழும்போதே கலாத்தியர் 5:19–21, மாற்கு 7:20–23, 1 கொரிந்தியர் 6:9–10இல் உள்ள எல்லா வகையான பாவங்களையும் செய்திருந்தாலும், அந்தப் பாவங்களிலிருந்து ஒவ்வொன்றாய் விட்டு புது சிருஷ்டியாய் வாழ முயற்சி செய்தவர்களே, தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகள் ஆவார்கள். எனவே கர்த்தருக்குப் பயந்து எந்த பாவ வாழ்க்கையும் வாழக் கூடாது. தேவப் பிள்ளைகளுடைய பழைய பாவங்கள், அவர்களுடைய நினைவை விட்டு முற்றிலும் மறக்காமல் அடிக்கடி ஞாபகத்திற்கு வந்து போகும். அதேசமயம் சில நேரங்களில் கோபம், எரிச்சல் போன்ற காரியங்கள் கூட ஆவி ஆத்துமா சரீரத்தில் வரும். எப்படி அடக்கிப் பார்த்தாலும் மீண்டும் ஏதாவதொரு சூழ்நிலையில் வந்து வந்து போகும்.

எனவேதான் **தூதர்கள் வரும் போது வெண் வஸ்திரத்தை கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்த பிள்ளைகள் மேல் போடுவார்கள். அப்போது ஆண்டவரின் வருகை நேரத்தில் அவர்களுடைய எல்லா பழைய சுபாவங்களும் பாவங்களும் மறந்து போகும். பரலோகத்திற்கு ஏற்ற தேவ சாயலைப் பெற்றவர்களாக வெண்**

வஸ்திரம் அவர்களை மாற்றிவிடும். தெரிந்து கொள்ளப்பட்ட தேவப் பிள்ளைகள் அணிந்திருந்த பழைய வஸ்திரம் (உடைகள்) அவர்கள் வாழ்ந்த வீட்டில் நிச்சயமாக கீழே விழுந்து கிடக்கும். அந்த வஸ்திரத்தை வைத்து வீட்டில் உள்ளவர்கள் நிச்சயம் பரலோகம் தான் போய் இருப்பார்கள் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். எப்படியெனில் 2 இராஜாக்கள் 2:13–14–இன்படி எலியாவின் மேலிருந்த சால்வை கீழே உள்ள எலிசாவின் மேல் விழுந்தது.

அதுபோலவே தெரிந்து கொள்ளப்பட்ட தேவ பிள்ளைகள் அணிந்திருந்த பழைய வஸ்திரம் கீழே அவர்கள் வாழ்ந்த வீட்டில் இருக்கும். வெண் வஸ்திரத்தோடு தான் வெளிப்படுத்தல் 7:13, வெளிப்படுத்தல் 3:4–5, வெளி. 7:9, 1 கொரிந்தியர் 15:51இன்படி ஒரே நிமிஷத்தில் பறந்து போவார்கள். மேலும் **வெண் வஸ்திரம் பழைய குணாதிசயங்களை முற்றிலும் மாற்றிவிடும். தேவ சாயலாயும் வானத்திற்குரிய மேனியைப் பெற்று தேவ தூதர்களைப் போல் வாழ்வதற்கும், தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகள் யார் என்று உறுதி செய்வதற்கும், இந்த வெண் வஸ்திரம் உதவி செய்கிறது.**

ஏனென்றால் ஆண்டவர் வருகை நாளில் உலகமெங்கும் அதிவேகமாக கொண்டல் காற்று, கோராவாரிக் காற்று, சுழல் காற்றுகள் வீசும். இதன் மூலம் துன்மார்க்கன் அவன் இருக்கும் இடம் தெரியாமல், காற்று அவன் தலையின் மீது மோதியதால் எங்கேயாவது பறந்து போய் விழுந்து, இறந்து கிடப்பான் – (எரேமியா 30:23, ஏசாயா 27:8). இவ்வாறாக துன்மார்க்கன் இறந்து போன நிலையிலாவது ஒருசில நாட்களுக்குள் கண்டுபிடிக்கப்பட்டு விடுவான். ஆனால் காணாமல் போன தெரிந்து கொள்ளப்பட்ட தேவப் பிள்ளைகள் அணிந்திருந்த வஸ்த்திரம் (உடை) வீட்டில் இருக்கும். அதன்மூலம் நிச்சயம் பரலோகம்தான் போயிருப்பார்கள் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

அவர்கள் பரலோகத்தில் இருப்பதால் தேவப் பிள்ளைகளை யார் தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது. எப்படியெனில் எலியா காணாமல் போனபோது 50 பலவான்கள் அவரைத் தேடினார்கள். ஆனால் **எலியா தீர்க்கதரிசி பரலோகத்திற்கு ஏறி போனதால் யாராலும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை – 2 இராஜாக்கள் 2:16–18. அதுபோலவே ஆண்டவரின் வருகையின் நாளில் பரலோகம் போன தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகளை யாராலும் கண்டுபிடிக்க முடியாது.** இப்படிப்பட்ட வெளிப்பாட்டை தேவன் தந்த கிருபைக்காக கோடி கோடி நன்றி கூறுகிறேன்.

7

ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகைக்குப் பிறகு எத்தனை ஆண்டுகள் இவ்வுலகம் இருக்கும்?

அன்புள்ள சகோதர சகோதரிகளே! ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு பிறகு **இவ்வுலகம், தானியேல் 12:11–12–இன் படி 7 வருடம் 70 நாள் இருக்கும் என்று எழுதி இருந்தாலும் கைவிடப்பட்ட தேவப் பிள்ளைகள் கதறி அழுவதின் மூலம் மத்தேயு 24:22–இன்படி ஏழு வருடமும் இல்லாமல் இன்னும் நாட்கள் குறைக்கப்பட்டு ஒரு சில வருடமே இவ்வுலகம் இருக்கும்.** அதைப் போலவே ஆண்டவர் வருகைக்கு பிறகு இவ்வுலகில் வாழ்கிற மக்கள், எல்லா மதத்தாரும் சேர்ந்து மூன்று பங்கு மக்கள்தான் இருப்பார்கள் என்று சகரியா 13:8–9இல் சொல்லப்பட்டு இருக்கிறது.

இந்த மூன்று பங்கு மக்களில் ஒரு பங்கு மக்கள் மட்டும், பல உபத்திரவத்திலும் '666' என்ற அந்தி கிறிஸ்துவாகிய பயோமெட்ரிக் சிப்பை அணியாதவர்கள், மேலும் தேவ பிள்ளைகளாக விசுவாசத் துடன் முழுமையாக ஆண்டவரை ஏற்றுக் கொண்ட வர்கள். ஆனால் தேவன் விரும்பாத நகைகளை அர்ப்பணம் பண்ணாமல் வாழ்ந்தவர்கள். **இனிவரும் கைவிடப்பட்ட நாட்களில் முதலில் உபாகமம் 7:25–26, எசேக்கியேல் 11:16–20இன்படி கர்த்தருடைய கட்டளையாகிய பொன்னும் வெள்ளியையும், அர்ப்பணித்து கர்த்தருக்கு பயந்து மீண்டும் வாழ்வார்கள். அவர்கள் நிச்சயம் கடைசி நாளில் 1 தெசலோனிக்கேயர் 4:15–17இன் படி பரலோகம் போவார்கள்.**

மேலும் இரண்டு பங்கு மக்கள் பெரும்பாலும் '666' என்ற பயோமெட்ரிக் சிப்பை அணிந்தவர்களாகத்தான் இருப்பார்கள். இவர்கள் சாத்தானின் பிள்ளைகளாக (வெளிப்படுத்தல் 14:9–11இல்) ஒருசில ஆண்டுகள் மட்டும் பூமியில் உயிர் வாழ்வார்கள். சிப் போட்டவர்கள் செயற்கைகோள்கள் மூலம் இணைக்கப்பட்டிருப் பதால், ஆண்டவரின் வருகை நாளில் நடந்த இயற்கை மாற்றங்களினால் அவர்கள் உடல் அளவில் அதிக பாதிப்பு அடைந்திருப்பார்கள். ஆகவே நோய்களால் தாக்கப்பட்டு எந்தத்

தொழிலும் செய்ய முடியாமல் வியாதியஸ்தர்களாய் சீக்கிரத்தில் மரித்து விடுவார்கள். இதனால் பஞ்சங்களும் பலவித கொள்ளை நோய்களும் அதிகமாவதால் அநேக மக்கள் இறந்து போவார்கள். வெளிப்படுத்தல் 8, 9, 16 ஆம் அதிகாரங்களின்படி இயேசு **கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பிறகு இயற்கையினால் ஆபத்துக்கள் நடைபெறும். பகிரங்க உலக முடிவு நாட்களுக்கு முன்பாக 2 பங்கு மக்கள் மடிந்து போவார்கள். மீதி இருக்கும் தேவனுக்கு பிரியம் இல்லாத மக்கள் கர்த்தருடைய பட்டயத்தால் அழிவார்கள்.**

எனவே உலக முடிவு என்பது பெரும்பாலும் மக்களையே குறிக்கிறது. இவ்வாறாக உலக முடிவு நாட்களில் 2 பேதுரு 3:10இன்படி நிச்சயம் அனைத்து அழிவுகளும் நடைபெறும். ஆண்டவரின் வருகைக்குப் பிறகு, கைவிடப்பட்ட தேவப் பிள்ளைகள் பூமியில் வாழும்போது வெளிப்படுத்தல் 22:14–இன்படி கர்த்தருடைய கட்டளைகளை கடைப்பிடிக்க வேண்டும். அப்போது நீங்கள் ஒருசில நாட்களாவது பரலோக பிள்ளையாய் வாழவேண்டும் என்பதற்காகவே இப்பூமி ஒருசில ஆண்டுகள் இருக்கும். அதன் பின்பு பிதாவின் சித்தப்படி இந்த உலகத்தின் முடிவு ஆகாய் 2:6, ஏசாயா 24:19–20இன்படி நடக்கும்.

எனவே அதிகப்படியாக ஏழு ஆண்டுகள் கூட, ஆண்டவர் இயேசுவின் இரண்டாம் வருகைக்குப் பிறகு இவ்வுலகம் இருக்கவே இருக்காது. சீக்கிரத்தில் இவ்வுலகிற்கு முடிவு வந்து விடும். ஆனாலும் இரண்டாம் வருகைக்குப்பிறகு, இப்பூமியில் வாழும் கைவிடப்பட்ட தேவ பிள்ளைகள் பயப்படவே வேண்டாம். பிதாவாகிய தேவனும், ஆண்டவராகிய இயேசுவும், பரிசுத்த ஆவியானவரும் உலகின் இறுதி வரை உங்களோடு இருப்பார்கள்.

நம் திரியேக தெய்வம் யோவேல் 3:16, மத்தேயு 28;20இன்படி நிச்சயமாக உங்களைப் பரலோகத்தில் இருந்து பாதுகாப்பார். பரிசுத்த ஆவியானவர் இப்பூமியில் இல்லாத போதும், தேவனுடைய தூதர்கள் பறந்து வந்து உங்களை பாதுகாப்பார்கள். **ஆண்டவரின் வருகைக்குப் பிறகு இவ்வுலகம் ஏழு வருடம் கூட நிலைத்திருக்காது என்ற வெளிப்பாட்டைத் தந்த தேவனுக்கு கோடான கோடி நன்றி.**

8

உலகம் முற்றிலும் அழியாமல் ஒரு சில தேவப் பிள்ளைகள் மட்டும் எல்லா கண்டங்களிலும் காக்கப்படுதல். – ஆமோஸ் 9:8, ஆதியாகமம் 8:27,22

அன்பின் தேவ பிள்ளைகளே! இவ்வுலகத்தில் முடிவு நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பிறகு இவ்வுலகம் ஒரு சில ஆண்டுகளில் அழியும் என்பதை முந்தைய தலைப்புகளில் வாசித்து இருப்பீர்கள். உலகம் அழியும். ஆனால் தேவப் பிள்ளைகள் முற்றிலும் அழியமாட்டார்கள். எப்படியெனில் 2பேதுரு 3:18இன்படி இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிகிற அறிவில் இன்னும் தேவப் பிள்ளைகள் நிச்சயம் வளர வேண்டும். பைபிளை (வேதத்தை) நன்றாக அலசி ஆராய்ந்து படிக்க வேண்டும் என்பது அடியாள் எனக்கு கிடைத்த வெளிப்பாடு. அமெரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய ஏழு கண்டங்களில் பல பாஷைக்காரர்களும் பல ஜாதியாரும் வாழ்ந்து வருகின்றார்கள்.

அதேபோல் தேவப் பிள்ளைகளாகிய யாக்கோபு என்னும் 12 கோத்திரங்களின் இஸ்ரேல் பிள்ளைகளும் வாழ்கிறார்கள். உதாரணமாக இவ்வுலக முடிவு எப்படி இருக்குமென்றால் 10 ஆம் வகுப்பு 11 ஆம் வகுப்பு பிள்ளைகள் அல்லது படிக்கும் அனைத்து பிள்ளைகளுக்கும், ஒவ்வொரு வருட இறுதியிலும் பரீட்சை வைக்கப்படுகிறது. வெற்றி / தோல்வி என்று ஒரு ரிசல்ட் கொடுத்து மீண்டும் புதிய பிள்ளைகள் சேர்க்கப்படுகிறார்கள். மறுபடியும் புதிய 10, 11 ஆம் வகுப்புகள் தொடங்கப்படுகிறது.

அதுபோலவே ஒவ்வொரு உலக முடிவிலும், தேவப் பிள்ளைகளை பரலோகத்திலும் துன்மார்க்கரை நரகத்தில் தள்ளுவதற்காகவே ஆகாய் 2:6இல் சொல்லப்பட்டபடி வானத்தையும் பூமியையும், இன்னும் கொஞ்ச காலத்திற்குள் அசைப்பார். ஏசாயா 24:19–21இன்படி இப்போது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வுலகமாகிய கலியுகம்

முடியும். இதுவே உலக அழிவு ஆகும். ஆனால் ஒவ்வொரு உலக முடிவிலும் ஏசாயா 24:13–இன்படி கொஞ்ச ஜனங்கள் (ஒருசில தேவ மக்கள்) ஒவ்வொரு கண்டத்திலும் காக்கப்படுவார்கள். அந்த ஜனங்கள் யார் என்றால் ஆமோஸ் 9:8 வசனத்தை நன்றாகப் படித்துப் பாருங்கள். யாக்கோபின் வம்சத்தை அதாவது 12 கோத்திர தேவப் பிள்ளைகளை, நம் கர்த்தர் முற்றிலும் அழிக்க மாட்டார். ஏழு கண்டங்களிலும் கர்த்தருக்குப் பயந்து அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கும் ஒரு சில மக்களைக் காப்பாற்றுவார். முந்தைய உலகத்தில் நோவா குடும்பத்தைக் காப்பாற்றியது போல நிச்சயம் ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒருசில வாலிபப் பிளளைகளை காப்பாற்றுவார். அநேக வாலிப தேவப் பிள்ளைகளுக்கு இந்த சத்தியம் தெரிந்திருக்கவேண்டும்.

அப்போதுதான் புதிய வானம் புதிய பூமியை குறிப்பாக வாலிப பிள்ளைகளைக் கொண்டு உண்டாக்குவார். அந்தப் புதிய உலகத்திற்கும் அவருடைய அநாதி தீர்மான திட்டங்களை, பைபிளின் வார்த்தைப்படி மீண்டும் நிறைவேற்றுவார். எனவேதான் **'வானமும் பூமியும் ஒழிந்துபோம். என் வார்த்தைகளோ ஒழியாது'** என்று கர்த்தர் சொல்கிறார். லூக்கா 24:35 – இந்த வசனத்தின்படி ஒவ்வொரு உலக முடிவிலும் பெருங்காற்று பெருமழை, பெரும் வெள்ளம் பெரிய அளவில் அக்கினியே பூமியில் இறங்கினாலும், மத்தேயு 7:24இன்படி கர்த்தருக்குப் பயந்து அவருடைய வசனத்தின்படி வாழும், ஒருசில தேவப் பிள்ளைகளின் வீட்டை பாதுகாப்பார். நோவா குடும்பத்தைப் போல புதிய உலகத்தை உண்டு பண்ணி, மீண்டும் தேவப் பிள்ளைகளை மட்டும் வாழ வைப்பார். சங்கீதம் 102:25, 26, ஆதி 8:21, 22 இந்த வசனத்தின்படி இந்த உலகம் முற்றிலும் அழியாது என்ற வெளிப்பாட்டை கர்த்தர் கொடுத்தார். அல்லேலூயா!

9

பூமி முழுவதும் ஒரே கர்த்தர் உருவாவதும், எல்லா பிள்ளைகளும் கர்த்தருடைய பிள்ளைகளாக மாறுவதும் எப்போது? – (ஏசாயா 27:6)

அன்புள்ள தேவப் பிள்ளைகளே! ஆதி நாட்களில் நம் பிதாவானவர் வானத்தையும் பூமியையும் படைத்தார். அவருடைய படைப்பில் மக்கள் அனைவரும் வாழ்வதற்கு ஏற்றபடி மரம், செடி கொடிகளையும் அதனதன் கனிகள், பழ வகைகள் எல்லாவற்றையும் மனிதனுக்காகப் படைத்தார். இவைகளை ஆதியாகமம் 1,2 ஆம் அதிகாரத்தில் படிக்கிறோம். **குறிப்பாக 6 ஆம் நாளில் மனிதனைப் படைத்து, பூமியின் கிழக்குப் பகுதியில் விசேஷமாக ஏதேன் என்னும் ஓர் தோட்டத்தை உருவாக்கி முதன் முதலில் அதில் வாழ வைத்தார். அவர் வாழ்ந்து மனித இன சந்ததி பெருகி தோட்டத்தை நிரப்ப வேண்டும்.**

சந்ததிக்கு ஏற்ப ஏதேன் தோட்டத்தை பெரிதாக்கி மனிதன் ஆயிரமாயிரம் தலைமுறை அங்கு வாழ வேண்டும். மேலே உள்ள தலைப்பின் படி பூமி முழுவதும் கர்த்தருடைய பிள்ளைகளே வாழ வேண்டுமென்பது பிதாவின் பெரிதான நோக்கம் ஆகும் – (ஆதியாகமம் 1:28, ஆதியாகமம் 2:8–9, யாத்திராகமம் 20:6). ஆனால் மனிதர்களாகிய ஆதாம் ஏவாள் பாவம் செய்தவுடனே அந்த ஏதேன் தோட்டத்தை விட்டு, பூமியில் வாழ்ந்து கொள்ளுங்கள் என்று கூறி வெளியேற்றி விட்டார் – (ஆதியாகமம் 3:24).

